**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

***(25.04.2015 முதல் 29.04.2015)***

***அறிக்கை எண் 31/2015*** ***தேதி: 24.04.2015***

***மாநிலத்தின் கடந்த வார வானிலை***

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 33°செ முதல் 37°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 12°செ முதல் 13°செஆகவும் பதிவானது. இரவு ,நேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமானது முதல் கன மழை காணப்பட்டது.

***எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் ( 25.04.2015 முதல் 29.04.2015)***

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். முதல் மூன்று நாட்களுக்கு 38 மிமீ அளவு மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 65 முதல் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11 கி.மீ முதல் 13 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 25.04.15 | 24 | 35 | 21 | 8 | 80 | 70 | 12 | தென்மேற்கு |
| 26.04.15 | 10 | 35 | 22 | 7 | 78 | 68 | 11 | தென்மேற்கு |
| 27.04.15 | 4 | 36 | 22 | 6 | 76 | 65 | 13 | தெற்கு |
| 28.04.15 | 0 | 36 | 22 | 5 | 76 | 65 | 11 | தென்மேற்கு |
| 29.04.15 | 0 | 36 | 22 | 5 | 75 | 65 | 12 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ மிதமான மழை மற்றும் காற்றின் வேகம் 10 கிலோ மீட்டருக்கு அதிகமாக எதிாபார்க்கப்படுவதால் குலை தள்ளிய வாழை மரங்கள் சாய வாய்ப்புள்ளது. இதை தவிர்க்க மூங்கில் கம்பு கொண்டு வாழைக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ கடந்த வாரங்களில் பெய்த மழை மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை கொண்டு மானாவாரி மற்றும் அறுவடை செய்த இறவை நிலங்களை கோடை உழவு செய்யவும்.
- ✓ மழையுடன் இடி மின்னலும் எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாக்க கொட்டைகளுக்குள் கட்டவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ மிதமான மழையுடன் காற்றின் வேகமும் அதிகமாக எதிாபார்க்கப்படுவதால் குலை தள்ளிய வாழை மரங்கள் சாய வாய்ப்புள்ளது. இதை தவிர்க்க மூங்கில் கம்பு கொண்டு வாழைக்கு முட்டு கொடுக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**